ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

अद्य प्राप्तं परमशिव यज्जन्म पुण्यैः पुराणैः
एतद्भाविन्यपि च जनुषि प्राप्तुमप्यन्तरायम् ।
कुर्वाणास्ते प्रबलरिपवः क्रोधमुख्या इमं मा-
माकर्षन्ति प्रसभमधुना दुष्पथे किं करोमि ॥ 5

𑌅𑌦𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑌶𑌿𑌵 𑌯𑌜𑍍𑌜𑌨𑍍𑌮 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑍈𑌃
𑌏𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌿𑌨𑍍𑌯𑌪𑌿 𑌚 𑌜𑌨𑍁𑌷𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌮𑍍 ।
𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌬𑌲𑌰𑌿𑌪𑌵𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍁𑌖𑍍𑌯𑌾 𑌇𑌮𑌂 𑌮𑌾
𑌮𑌾𑌕𑌰𑍍𑌷𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑌧𑍁𑌨𑌾 𑌦𑍁𑌷𑍍𑌪𑌥𑍇 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍋𑌮𑌿 ॥ 5

ஹே பரமசிவ! ஸர்வேசுவரரான ஹே மஹேச! முன் ஜன்மாக்களில் செய்த புண்யவசத்தால் இப்பொழுது யாதொரு சிறந்த பிராமண ஜன்மாவானது அடையப்பட்டிருக்கின்றதோ, இந்தமாதிரியே வரப்போகிற ஜன்மாவிலும் சிறந்தஜன்மாவைப்பெறுவதற்கு முடியாமல்குரோதம்,லோபம்,முதலிய மிகவும் பலவான்களான சத்ருக்கள் பல இடையூர்களைச் செய்து என்னைக் கெட்ட வழிகளில் பலாத்காரமாக இழுக்கிறார்கள். நான் என்ன செய்வேன். நீர் அனுக்கிரகிக்க வேண்டும்.

முற்பிறவியில் என்னால் செய்யப்பட்ட நற்கர்மங்களால் இப்பொழுது அந்தணர் வம்சத்தில் பிறவியைப் பெறும்படி நேர்ந்திருக்கிறது. இதிலிருந்தும் மேலான பதவியைப் பெறாவிட்டாலும் இவ்விதமாவது இனிவரும் ஜன்மாவிலும் வேதியர் குலத்திலுதிக்கலாமென்பதற்குக் கூட முடியாமல் காமம் முதலான சத்துருக்கள் எனக்குப் பலவிதமான விக்னங்களைச் செய்து, பாபகர்மாக்களைச் செய்யும்படி எப்பொழுதும் தூண்டுவதோடு கெட்ட மார்க்கங்களிலும் இழுக்கின்றன. ஆகையால் அவைகளை ஜயிக்க எனக்குச் சக்தியில்லை. உம்முடைய அனுக்கிரஹத்தால் தான் நான் நற்கதி பெறவேண்டுமென்று ஒருவர் ஸ்ரீ பகவானிடம் பிரார்த்திக்கிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
விபவ-௵ ஆனி-மீ ௮௨

# "உபதேசபஞ்சகம்"

(254-வது பக்கத்தொடர்ச்சி.)

𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌣𑌾𑌮𑍇𑌧𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑌿𑌯𑌮𑌿𑌤𑌤𑌨𑍁𑌭𑌿𑌃 𑌸𑍍𑌥𑍀𑌯𑌤𑍇 𑌗𑌰𑍍𑌭𑌵𑌾𑌸𑍇 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌵𑌿𑌶𑍍𑌲𑍇𑌷𑌦𑍁𑌃𑌖𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑌰𑌵𑌿𑌷𑌮𑍇 𑌯𑍌𑌵𑌨𑍇 𑌚𑍋𑌪𑌭𑍋𑌗𑌃 । 𑌨𑌾𑌰𑍀𑌣𑌾𑌮𑌵𑌜𑍍𑌞𑌾 𑌵𑌿𑌲𑌸𑌤𑌿 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑍍𑌯𑌸𑌾𑌰𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌰𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌵𑌦𑌤 𑌯𑌦𑌿 𑌸𑍁𑌖𑌂 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌮𑌪𑍍𑌯𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 ।

ஸம்ஸாரத்தை ஆரம்பம் முதல் எவ்வளவு நன்றாய் கவனித்தாலும் ஒரு ஸமயத்திலாவது, அற்பசுகமாவது, இருக்கென்று கூறவியலாது. ஸம்ஸாரத்துக்குத் துவக்க ஸமயமான கர்ப்பாவஸ்தையில் மாதாவினுடைய உதரத்தில் மிகவும் நிந்தியமான மலங்களுடையமத்தியில் ஜாடராக்னியால் பீடிக்கப்பட்டு இருப்பதற்குப் போதுமான இடம் கிடைக்காமல் குறுகிய இடத்தில் கைகால் முதலான சகல அவயவங்களையும் ஒடிக்கிக்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு வசிக்கப்படுகின்றது. யௌவன சமயத்தில் விஷயசுகங்களை அனுபவிக்க வேண்டுமென்கிற நமது விருப்பத்தின்படி அனுபவிக்க முடியாமல் பலவாறான கஷ்டங்களை அனுபவிக்கிறோம். வயது முதிர்ந்த காலத்தில் இந்திரியங்களின் சக்திகுன்றி, நம் சரீரபோஷணத்திற்குப் பிறரை எதிர்பார்க்க வேண்டியிருப்பதால் அக்காலத்தில் அவர்களால் செய்யப்படும் பலவித அவமானங்களையும் அடையவேண்டியிருக்கிறது. ஆகையால் रे मनुष्या: 𑌰𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 அறிவின்மையால் ஸம்ஸாரக்கடலில் மிழ்ந்து கஷ்டப்படும் ஹே மனிதர்களே இந்த ஸம்ஸாரத்தில் அற்பத்தினுடைய லேசமாவது சுகமிருப்பின் சொல்லுங்கள் அங்கீகரிக்க ஆக்ஷேபமில்லை. ஒரு ஸமயத்திலும் சுகம் என்கிற வார்த்தையைக் கூட உச்சரிக்க அருகமில்லாத கஷ்டங்களுக்கு இருப்பிட

மான இதில் என் விழுந்து ஜன்மாவை வீண் பண்ணுகிறீர்கள் என்று ஒருமஹான் விளம்பியிருக்கிறார். ஸகலகஷ்டங்களுக்கும் வாஸபூமியாயும், தோஷரூபமாயுமுள்ள, இந்த ஸம்ஸாரத்தை சுத்தமான சித்தத்துடன் கவனிக்கும் எவனுக்குத் தான் இதில் வைராக்கியமுண்டாகாது. அவச்யம் உண்டாகுமென்று நம் பரமாசார்யாளும் அடியில் வருமாறு அறிவிக்கிறாகள்.

कुक्षौ स्वमातुर्मलमूत्रमध्ये स्थितिं तदा विट्क्रिमिदंशनं च ।
तदीयकौक्षेयकवह्निदाहं विचार्य को वा विरतिं न याति ॥

குக்ஷௌ ஸ்வமாதுர்மலமூத்ரமத்யே ஸ்திதிம் ததாவிட்க்ருமிதம்சநம் ச । ததீயகௌக்ஷேயகவஹ்நிதாஹம் விசார்ய கோ வா விரதிம் ந யாதி ॥

கர்ப்பஸமயத்தில் மலம், மூத்திரம் இவைகளால் நிரம்பிய தன் தாயினுடைய உதரத்தின் மத்தியில் தன்னுடைய ஸ்திதியையும் அந்த ஸமயம் அங்குள்ள சில புழுக்களால் செய்யப்படும் ஹிம்ஸையையும் ஜாடராக்னியால் ஏற்படும் தாபத்தையும், நன்கறிந்த எவன்தான் இந்த ஸம்ஸாரத்திலிருந்து வைராக்யத்தை அடைய மாட்டான்.

स्वीकीयविण्मूत्रविसर्जनं तच्चोत्तानगत्या शयनं तदा यत् ।
बालग्रहाद्याहतिभाक्च शैशवं विचार्य+ + +न याति ॥

ஸ்வீகீயவிண்மூத்ரவிஸர்ஜநம் தச்சோத்தாநகத்யா சயநம் ததா யத் । பாலக்ரஹாத்யாஹதிபாக்ச சைசவம் வி + தி ॥

நிமிர்ந்தபடியே சயனமும், சயனித்தப்படியே சரீர மலங்களைக் கழித்தும் அவைகளின் மேல் சில சமயங்களில் ஏற்படும் படுக்கையும் பாலக்கிரகமென்று கூறப்பட்ட சில துஷ்டக்கிரகங்களாலுண்டு பண்ணப்பட்ட பீடையையும், தனக்கு வேண்டிய ஆஹாரத்தையோ அல்லது பசியுள்ள காலத்தையோ, சரீரத்திலேற்படுப் கஷ்டங்களையோ, பிறருக்கு அறிவிக்க முடியாமல் படும் கஷ்டத்தையும் ஆலோசித்துப் பார்த்தால் எவன்தான் இனி இந்த கஷ்டங்களை அனுபவிக்கும் சைசவாவஸ்தைக்குக் காரணமான இச்சரீரம் வேண்டாமென்று ஒழிவடையமாட்டான். இதற்கு மேல் யௌவனாவஸ்தை என்று ஒரு பிரிவு உண்டு. அந்த சமயத்தில் படும் கஷ்டத்தையும் அடுத்த சுலோகத்தால் நிரூபிக்கிறார்.

मदोद्धतिं मान्यतिरस्कृतिं च कामातुरत्वं समयातिलंघनम् ।
तां तां युवत्योदितदुष्टचेष्टां विचार्य++न याति ॥

𑌮𑌦𑍋𑌦𑍍𑌧𑌤𑌿𑌂 𑌮𑌾𑌨𑍍𑌯𑌤𑌿𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑌿𑌂 𑌚 𑌕𑌾𑌮𑌾𑌤𑍁𑌰𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑌯𑌾𑌤𑌿
𑌲𑌙𑍍𑌘𑌨𑌮𑍍 । 𑌤𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌯𑍁𑌵𑌤𑍍𑌯𑍋𑌦𑌿𑌤𑌦𑍁𑌷𑍍𑌟𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌂 𑌵𑌿 + 𑌤𑌿 ।

மதத்தாலேற்பட்ட கர்வத்தையும். பெரியோர்களைச் செய்யும் அவமானத்தையும், எப்பொழுதும் விஷய சுகத்திலிருக்கும் அதிக விருப்பத்தையும் தன் வர்ணாச்ரமங்களுக்குற்ற தர்மானுஷ்டானங்களில் பற்றுதலில்லாமலேற்படும் வெறுப்பையும் அக்காலத்தில் ஸ்திரீகளால் கூறப்பட்ட இவ்விதமென்று சொல்லமுடியாத கெட்ட நடத்தைகளையும், விசாரித்துக் கவனித்தால் ஒருவனும் மறுபடியும் இவ்வித யௌவன சரீரத்தைப்பெற இச்சிக்கமாட்டான். இதற்கு அடுத்தது முதிர்ந்தவயதுள்ள காலம்,

विरूपतां सर्वजनादवज्ञां सर्वत्र दैन्यं निजबुद्धिहैन्यम् ।
वृद्धत्वसम्भावितदुर्दशां तां विचार्य++न याति ॥

𑌵𑌿𑌰𑍂𑌪𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑌾𑌦𑌵𑌜𑍍𑌞𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌦𑍈𑌨𑍍𑌯𑌂 𑌨𑌿𑌜
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌹𑍈𑌨𑍍𑌯𑌮𑍍 । 𑌵𑍃𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌸𑌮𑍍𑌭𑌾𑌵𑌿𑌤𑌦𑍁𑌰𑍍𑌦𑌶𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌵𑌿 + 𑌤𑌿 ।

அதிக வயதாகிவிட்டால் சரீரத்திற்குத் தளர்ச்சி ஏற்பட்டு அதனால் விகாரமடைந்து பல ஜனங்களாலும் செய்யப்படும் அவமானத்தையும், எப்பொழுதுமிருக்கும் தைன்யாவஸ்தையையும், தம் புத்திக்கு ஏற்படும் சக்திக் குறைவையும், மற்றுமேற்படும் பலவித கஷ்டங்களையும், நன்கறிந்தவன் இவ்வித சரீரம் இனி ஒரு சமயமும் நமக்கு வேண்டாமென்று வெறுப்படையாமல் இருப்பானா? எவ்வித சுகங்களையும் அனுபவிக்க முக்கிய ஸாதனமான இந்த சரீரத்தின் ஸ்திதியே இவ்விதமிருக்குங்கால் இதினால் அனுபவிக்கப்படும் விஷயங்களைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. ஆகையால் இந்த சரீரத்தாலும் இதனால் அனுபவிக்கப்படும்விஷய சுகங்களாலும் அதிக கஷ்டமேற்படுவதைத் தவிர அற்பமேனும் சுகமே இல்லையென்று அறிவித்திருக்கிறார். இவ்விதம்ஸாம்ஸாரிகமான சுகத்தில் நிரூபிக்கப்பட்ட பல தோஷங்களையும் கவனிக்க வேண்டும் இந்த தோஷங்களை நன்கறிந்தால் ஸம்ஸாரத்திலிருக்கும் பற்றுதல் முற்றிலும் விலகிவிடும். உத்தமமான சுகததைப் பெறுவதற்கு இடையூராயிருந்த இந்த பந்தம் விலகியவுடன் செய்யவேண்டிய கார்யம் யாதென்பதை அடுத்த வாக்யத்தால் உபதேசிக்கிறார்.

(இன்னும் வரும்) உபபத்திராதிபர்.

# விவாகமசோதா.

சமீபத்தில் மதுரையில் சாரதா அவர்கள் கொண்டுவந்திருக்கும் பில்லைக் கண்டிப்பதற்காக ஒரு பெருங்கூட்டம் மகா-ா-ஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் பங்களாவிற் கூடியது. அவ்வமயம் சிருங்கேரி ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்டசாஸ்திரிகளவர்களும் ஸபைக்கு விஜயம் செய்தனர். திண்டுக்கல் வக்கீல் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யரவர்கள் மனமுவந்து அக்கிராசனம் வகித்ததும் ஸ்ரீகண்டசாஸ்திரிகளவர்கள் முதலில் இம்மசோதா அவசியமே இல்லையென்றும் இதனால் ஒருவருக்குமே ஸாதகம் கிடையாததோடு இந்தியர் யாவருக்குமே கூடிய சீக்கிரத்தில் மிகுந்த கஷ்டத்தை உண்டுபண்ணிவிடுமென்றும் மேற் தேசம் போல் ஸ்திரீ வ்யவஸ்தைக் கெட்டு அத்தேசத்தைக் காட்டிலும் அநேக துர்நடத்தைகள் அதிகமாய்விடுமென்றும் ஆகவே இதை ஆதரிக்கவே கூடாதென்றும் யுக்திசாஸ்திரங்களைக்கொண்டு வெகு நன்றாய் உபன்யசித்தார்கள். பிறகு தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள், சிவகெங்கை சுந்திரசிரௌதிகள், கும்பமோணம் தாதாசார்யஸ்வாமிகள், சிவராமகிருஷ்ணசாஸ்திரிகளும், சுருதிஸ்மிருதி பிரமாணங்களுடன் நன்கு உபன்யசித்தனர். பிறகு நான் பிரகிருதத்தில் இவ்விதம் அனர்த்தங்கள் அடிக்கடி நேறுகிறபடியாலும், இனியும் வரக்கூடுமானதாலும், இவைகளைத் தடுக்க வேண்டுமானால் நாம் ஒரு கூட்டம் கூட்டவேண்டுமென்றும் அக்கூட்டம்தான் அசலான இந்துக்கள் கூட்டம் என்று ராஜாங்கத்திற்கு மெய்பிக்க வேண்டுமென்றும், அவ்விதம் செய்ய நமக்கு ஒரு தனியான தினசரி பத்திரிகை வேண்டுமென்றும், அவ்விதம் தினசரி பத்திரிகைக்கு மடாதிபதிகள் பொருளுதவி செய்யவேண்டுமென்றும், அவ்விதம் சிலர் ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி அவர்களின் ஸன்னிதியில் விண்ணப்பித்துக் கொண்டதில் அதற்கிணங்கி அதற்காக பதினாயிரம் ரூபாய் உபகரிப்பதாய் வாக்களித்திருக்கின்றனரென்றும் அது சீக்கிரம் முடிவு பெருங்காலம் நெருங்கி பகவானது கிருபைகிடைத்துவிட்டதென்பதற்கனுகுணமாய் இப்போது ஸபை முன் விளங்கும் பிர்மஸ்ரீ ஸ்ரீகண்டசாஸ்திரிகள் அவர்களும், அங்கீகரிப்பார்களென்றும் விக்ஞாபித்துக் கொண்டேன். பிறகு சாஸ்திரிகளவர்களும் அவ்விதமே செய்கி

ரேமென்று வாக்களித்தனர். இவ்விதமே அஹோபிலம் ஸ்ரீ மடம் வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் மற்றவர்களும் ஏற்றுக்கொள்வார்களென்பது கூடிய சீக்கிரத்தில் வெளிவரும். இவ்விதம் அன்று சபை இனிது முடிவு பெற்றது. ஆகவே இதைக் கண்ணுறும் ஆஸ்திகர் ஒவ்வொருவரும் அவ்விதப் பத்திரிகையின் வரவை எதிர்பார்த்திருக்கவேண்டும், முதலில் கொஞ்சகாலத்திற்கு ஆங்கில தினசரிப் பத்திரிகையே அநேக கார்யங்களை உத்தேசித்து முன்வரும். பிறகு தேசபாஷையில் வெளிவரும். பத்திரிகை ஹிந்து பத்திரிகைபோலவே இருக்கும். சந்தாத்தொகை குறைக்கப்பட்டே வெளிவரலாம். சுபம்!

---

## ஜகதாசாரியாளின் பாண தீர்த்தயாத்திரை.

ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யரவர்கள் சோழ நாட்டில் விஜயயாத்திரை செய்துவருவதை ஆஸ்திகர் யாவருமறிவர் அம்மகான் பாணதீர்த்தத்தில் ஸ்னானம்செய்வதன் மூலம் லோகக்ஷேமத்தைக் கருதி அத்தீர்த்தம்உள்ளவிடத்தின் அதிபதியின் ஜமீன் சிங்கம்பட்டி என்னும் ஊருக்கு விஜயமானார்கள். இங்கு ஆசார்யர்களின் மஹிமையைக் கூறுவதே முக்கியப் பிரயோசனமாயினும், இம்மஹிமையைப்பிரகாசப்படுத்த முன்வந்த ஆசார்ய பக்தரான ஸ்ரீமான் சிங்கம்பட்டி ஜமீன்தாரவர்களின் உதார குணத்தை முதலிற் கூறுமலிருப்பது பெறும் குற்றமாகுமென்று கொண்டு முதலில் அதையே கூறுகின்றேன்.

நம் பரமாசார்யர்கள் பாண தீர்த்தத்திற்கு நெருங்கி வருமுன்னமே தமது பக்த சிகாமணியை அனுப்பித்த தமது வரவை ஆக்ஞாபித்தனர். அவ்வமயம் கொடைக்கானலில் வாசம் செய்த ஜமீந்தாரவர்கள் தமது ஆப்தரான ராமனாதபுரம் ராஜா அவர்களின் மூலம் ஸ்ரீமதாசார்யாரவர்களின் மகிமையை நன்கறிந்து உடனே யுவராஜா அவர்களுக்கு லெட்டர் மூலமாய் ஆசார்யரவர்களின் விஜயத்திற்கு வேண்டிய சௌகர்யங்கள் யாவற்றையும் நன்கு நடத்துமாறு அறிவித்தனர்.

அங்குள்ள கைங்கர்யக்கிரமம் கவனிக்கத்தக்கது. பாணதீர்த்தம் உள்ள புண்யஸ்தலம் மலையின்மேல் இருக்கிறது. அங்கு யாத்

திரை செய்வது ஆடி அமாவாசையை முன்னிட்டுத்தான். அச் சமயம் அந்த 2, 3-நாட்களில்தான் ஜனசஞ்சாரம் உண்டு. அதை ஒட்டியே அங்கு பாதையை செப்பனிடும் வழக்கம். இத்தகைய விடத்திற்கு இப்போது போகவேண்டுமென்று மகான் சங்கல் பித்து விட்டதை முன்னிட்டு மகாராஜாவின் உத்திரவுப்படி 1000 ஜனங்கள் வரை பாதைகளை அதிசீக்கிரம் செப்பனிட்ட ஆச்சரியத் தைப் பத்திரிகை மூலம் எவ்வளவு எழுதினாலும் வெளியாகுமெ ன்று தோன்றவில்லை. என்ன சொல்லலாம்!

**तथातिथ्यं चक्रे भरतबलभाजां तनुभृताम् ।**

**ததாதித்யம் சக்ரே பரதபலபாஜாம் தநுப்ருதாம் ।**

பரத்வாஜர் பரதனுடைய ஸைன்யங்களுக்கு அப்படி மரியாதை செய்தார் என்று ஆச்சர்யக்குறியுடன் கவிகூறியது போல் அவ் விதம் பாதையை செப்பினிடக் கட்டளையிட்டார். எவ்விதமா னல் ஆசார்யர்கள் பரிவாரங்களுடன் சுகமாய் விஜயம் செய்வார் களோ என்று இவ்விதம் செப்பினிடப் பட்ட பிரதேசத்திற்கு நம்பரமாசார்யாளவர்கள் 8-6-28 வெள்ளிக்கிழமை காலை மாலை பூஜைகளை விமரிசையாய் மகாராஜா அவர்கள் சிங்காரவனத்தின் பங்களாவில் முடித்துக்கொண்டு சாயங்காலம் பரிமித பரிவாரத் துடன் விஜயமாகி மலையில் சுமார் 8-மயில் தூரம் உள்ள சொரி முத்தய்யன் கோவில் பக்கத்திலிள்ள அழகிய கட்டத்தில் விஜய மாயினர். இச்சமயம் அபுண்யவானுன எனக்கு நேர்ந்த பாக்கி யத்தையும் சமயத்தையொட்டிப் புகழவேணடியதாய் இருக்கிறது காரணுந்தரத்தை உத்தேசித்து ஸன்னதிக்கு வரும்படி ஆக்ஞை யைப் பெற்றநான் 9-தேதி சாயந்திரம் சிங்கம்பட்டி கிராமத்தை அடைந்து வழியில் தென்பட்ட ஸ்திரீபுமான்களை ஜகதாசாரியா ளின் ஸன்னிதானம் இருக்குமிடம் எங்கே என்று வினவினேன். அப்போதவர்கள் சாமிகள் மலைமீதிருக்கின்றனர். பாணதீர்த்தம் அங்கிருந்து 5-மயில் இருக்கின்றன. அங்கு இக்காலத்திற்போ வது முடியாதகாரியம் ஆகவே அவர்களை எப்படியாவது இறங்கி வந்துவிடச் செய்ய வேண்டுமென்று உருக்கமாய் பேசினர். அவ் விதமே மடத்திலிருந்தவர்களை விசாரித்ததில் ஸன்னிதானம்உயர மலையில் இருப்பதாயும், பாணதீர்த்த ஸ்னனம் செய்யாமல் இறங் குவதில்லையென்று திடசங்கற்பம் கொண்டிருக்கின்றனரென்றும்,

கேழ்விப்பட்டவுடன் இவ்விதம் மனதில் எண்ணினேன். ஸமுத்திரராஜனைப் பிரஸாதிக்கச் செய்ய ஸ்ரீ ராமபிரான் தர்ப்பசமயத்தில் அமர்ந்ததுபோல் இருக்குமென்றே பிறகு பாக்யவசத்தால் அனுயாசமாய் உயரச்சென்று மகானது திவ்யசரண தரிசனம் செய்துகொண்டேன். சற்று நேரத்திற்கெல்லாம் திரிபுரசுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராது திவ்யாராதனத்தை முடித்துக் கொண்டு ஸ்ரீமதகஸ்திய முனிவரது திருவுள்ளத்தால் முதல் நாள் இரவு மழையில்லாமலிருந்ததைக் கொண்டு பரிவாரங்கள் சூழத் தீர்த்தகட்டத்திற்குவிஜயம்செய்தனர்ஸமஸ்தானத்துஉத்யோகஸ்தர்களால் காண்பிக்கப்பட்ட ஒவ்வொரு விசேஷங்களையும் கண்டு ஆனந்தித்தனர். பிறகு எப்பொழுதும் அங்கு மழைபெய்துகொண்டிருந்தும்அதை ஆனந்தமாய் அனுபவித்துக்கொண்டுமழையில் நின்றுகொண்டே பரிவாரங்கள் சூத்திரர்கள், ஸ்திரீகள் உள்பட யாவரையும் நீர்வீழ்ச்சியில் நீராடச் செய்து அதன் பிறகே ஸ்ரீசரணங்கள் ஸங்கற்பத்துடன் ஸ்னானத்திற்குவிஜயமாயினர்.

அவ்வைபவத்தில் ஜகதாசார்யாளின் அங்க ஸம்பந்தத்தால் சிதறும் திவ்ய தீர்த்தம் மேலில் தெரிக்கும்படி பரம பாக்கியத்தைப் பெற்று நான் கிருதார்த்தனானேன். முககமலத்தினின்றுமுதித்த ஸ்னான சங்கல்பம் பாபியான எனக்கும் அனுக்கிரகிக்கப் பெற்றது. இவ்விதம் ஸ்னானத்தை முடித்துக் கொண்டு பிறகு 5-மயில் தூரத்திலுள்ள ஜாகைக்கு வந்து அன்று தாமதித்து மறுதினம் இறங்கி சிங்கம்பட்டிக்கு விஜயமாயினர். இவ்விதம் இக்காலத்தில் அங்கு ஸ்னானம் செய்வதற்குப் பரம கைங்கர்யம் பெற்ற தீர்த்தபதி மகாராஜா அவர்களுக்கு ஏற்பட்ட தீர்த்தபதி என்ற பெயர் காரணப்பெயர்தானென்று புகழாதவர் யாருமிலர். இவ்விதம் இம்மகான் தீர்த்தபதிக்கு மிகுந்த அனுக்கிரகத்தைச் செய்து இனி கன்யாகுமரி க்ஷேத்திரத்திற்கு விஜயமாகப் புறப்பட்டனர். வெகு சீக்கிரம் குமரியைத் தரிசனம் செய்துகொண்டு சமீபித்துவரும் சாதுர்மாஸ்யத்திற்காக மதுரைக்கு அருகாமையிலுள்ள திருவேடகத்திற்கு வருவதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அங்கு 2-மாதம் தாமதிப்பதில் அனேக கார்யங்கள் லோகக்ஷேமார்த்தம் செய்யவேண்டியிருப்பதால் அதற்கு அதுதான் மத்தியதேசமென்றஎண்ணத்தால்தான் அங்கு ஏற்பாடாகிறது. அது அப்போதப்போது வெளிப்படும். ஆகவே

இம்மகாமகனீயாது விஜயம் ஒவ்வோரிடத்திலும் பொதுவாய் வேதசாஸ்திரா விரோதமான கார்யங்களுக்கே தவிர வேறொன்றுக்குமல்லவென்பதை அறிந்த ஆஸ்திகர்கள் யாவரும் சாதுர்மாஸ்யசமயத்திற்கு திருவேடகத்திற்கு வந்து ஆசார்ய திவ்யதரிசனத்தைச்செய்துகிருதார்த்தர்களாக வேண்டுமென்றும் கடைசியாய் கேட்டுக்கொள்ளுகிறேன். திருவேடகமென்னும் திவ்யக்ஷேத்திரம் சோழவந்தான் ஸ்டேஷனுக்குக் கிழக்கே 2-மயில் தூரத்திலுள்ள திவ்யக்ஷேத்திரம். சுபம் !

M. N, சுப்பிரமண்யசாஸ்திரியள்.

---

## சேலம்ஜில்லா.

## விவாஹவயதுமசோதா கண்டனக் கூட்டங்கள்.

ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸ்ரீ சரணங்களை சிரமேற்றுணையாகக்கொண்டு சேலம்ஜில்லாவுக்குச் சென்றேன். ஜில்லா பாதிக்குமேல் மலைப்பிரதேசமாயுள்ளது, பிராமணர்களின் தொகையும் குறைவே. நான் சென்ற காலம் நல்ல மழை பெய்திருந்தபடியால் வாஸ யோக்கியமாகவே இருந்தது.

### விஷயாலோசனைக் கமிட்டி.

5—6—28 மாலை5-மணிக்கு சேலம் டவுன் இரண்டாவது அக்ரஹாரத்தில் ஸ்ரீமான் குஹதாசர்களான K. R. சுப்பிரமணியய்யர் B A., B.L. வக்கீல் அவர்கள் இல்லத்தில் கமிட்டி கூடிற்று. ஷையார் பென்ஷனர் முன்சிபல் ஸர்வேயர் ஸ்ரீமான் ராமஸ்வாமி அய்யர், ஸ்கூல்மாஸ்டர் பென்ஷனர் ஜீ. நரஸிம்மய்யர், பஞ்சநதய்யர், மற்றும் பலருமான மகாஜனங்கள் கூடி விஷயாலோசனை செய்ததில். இந்த ஜில்லாவானது 10-தாலூக்காக்கள் உள்ளபடியாலும், ஒவ்வொரு தாலூக்காவிலிருந்தும், பிரதிநிதிகள் சொந்த பிரயாணச்செலவு செய்துகொண்டு வருவார்களென்பதுயோசிக்க வேண்டிய விஷயமாயிருக்கிறபடியினாலும், இவ்விஷயத்தில் பக்தி சிரத்தையுள்ள சார்பார் குறைந்த எண்ணிக்கையுடயவர்களாயிருப்பதாலும் பிரசாரகரான அடியேன், மற்ற தாலூக்கா வாஸிகளின் நிலைமையை நேரில் தெரிந்துகொண்டு, சுலபமாய் முடியுமெ

ன்று தெரிவித்தால், இங்கே ஜில்லாசபை கூட ஏற்பாடு செய்ய லாமென்று தீர்மானிக்கப்பட்டது.

சேலம் டவுன்.— உள்ளூர் பிரமுகர்களான வக்கீல் கே.ஆர். சுப்பிரமணியய்யர் பி. ஏ, பி.எல். பழனி சுப்பராய் அய்யர் B.A B.L B. V. நாஸிம்மய்யர் M. L, C. K. நடேசய்யர் M. A., M, L. A. E. வெங்கடேசய்யர் M. A, B L. நாவல்டி ராமய்யர் பி. ஏ., பி. எல்., இவர்களுடைய ஆதரவின்பேரில் வக்கீல் டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் பி.ஏ. பி.எல். அவர்கள் கிருஹத்தில் 6—6—28 இரவு 8-மணிக்கு நடந்துவரும் ஸ்ரீ ராமாயணம் சீக்கிரமாய் நிருத்தப் பட்டு ஸ்ரீ ராமாயணம் :காட்டுப்புத்தூர் சுப்ரம்மண்ய சாஸ்திரிக ளாலேயே அடியேனை ஸபையோருக்கு அரிமுகம் செய்து வைக் கும் பாவனையாய் விவாகவயதுமசோதா கண்டனத்தை பிரேரே ரிபிக்கப்பட்டது. பிறகு என்னுல் ஒருமணிநேரம் அக்கண்டனம் ஆமோதிக்கப்பட்டு ஸபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டது. இதில் ஸௌராஷ்டிர, வைசிய சினேகிதர்கள் கலந்துகொண்டனர். பிறகு பென்ஷன் ஸ்கூல்மாஸ்டர் ஜீ. நாஸிம்மய்யர் அவர்களால் மஹஸரில் எண்ணிறந்த கையெழுத்துக்கள் வாங்கி கவர்னர், வைஸ்ராய் இவர்களுக்கு இது 'துடர்ச்சி மஹஸர்' என்று அனுப் பப்பட்டது. இந்த மீட்டிங்கு கூட்டுவதற்கு ரிடேர்ட் ஸர்வேயர் ராமஸ்வாமி அய்யர் மிக்க ஊக்கம் காட்டினர்.

ராசிபுரம்:— 7—6—28 ராசிபுரம் அக்ரஹாரத்தில் இ. எஸ். ராமசேஷ அய்யர் பி. ஏ. வக்கீல் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஓர் கண்டனக் கூட்டம் கூடிற்று. இரவு 7-மணிக்கு அக்ரா ஸனர் தீர்மானத்தை பிரேரேபித்தார். வக்கீல் ஆர். வி. கிருஷ்ண மூர்த்தி அய்யர் பி. ஏ அவர்களால் ஆமோதிக்கப்பட்டு பி. எஸ். விசுவநாதய்யர், வெங்கட்டராமய்யர், புவனேச்வா அய்யர். லக்ஷ்மீநாராயணய்யர் முதலானவர்களால் அங்கீகரிக்கப்பட்டுகண் டனத்தீர்மானம் கவர்னர்வைஸ்ராய் இவர்களுக்கு அனுப்பச் செய்யப்பட்டது. ஸ்கூல்மாஸ்டர் விசுவநாதய்யரும், தேவக் கோட்டை பாங்கு கோபாலய்யங்காரும் இவ்விஷயத்தில் அரும் பாடு பட்டனர்.

### நாமக்கல்

இப் பெயர் கொண்ட மலை நகரத்தின் நடுவிலிருப்பதால் கா ரணப்பெயர்போலும், 8—6—28. காலை இங்கு வந்தேன். கோ. ஆ

யரேடிங் இன்ஸ்பெக்டர் சீனுவாஸய்யர் B.A. அவர்களால் தகுந்த மனிதர்களிடம் அரிமுகம் செய்விக்கப்பட்டது பிறகு மாலை 5. மணிக்கு வக்கீல் சந்திரமௌளீசுவரய்யர் பி. ஏ. பங்களாவில் C. M. ரங்காராவ் பி.ஏ. பி.எல், தலைமையின் கீழ் ஓர் கூட்டம் நிகழ்வுற்றது. கோதூர் மிட்டாதார் ராஜாராவ், அச்வத்தாமசாஸ்திரிகள் வக்கீல் சேஷய்யங்கார் பி.ஏ., பி.எல். முதலான பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். முடிவில் ஏகமனதாய் மகஸரில் கையெழுத்துச் செய்து கவர்னர், கவர்னர் ஜனரல்துரை இவர்களுக்கு அனுப்பும்படி செய்யப்பட்டது. மலையின் அடிவாரத்தில் அம்மலையிலேயே செதுக்கப்பட்ட நரஸிம்மமூர்த்தி, மும்மூர்த்திகளுடன் விளங்கிவருவது ஆச்சரியப்படத்தக்கதே.

## திருச்சங்கோடு

புதிதுபுதிதான மசோதாக்களிலும் விவாகவயதுமசோதா குரூரமானதென்று எண்ணிப் போல பூமியை விட்டு 2-மயில்உயரமுள்ள மலைபோல் ஈசுவரன் அர்த்த நாரீச்வரராக இவ்வூரில் விளங்குகிறார். உள்ளூரில் பரம்பரையாக பாங்கரும், வியாபாரியுமான ஸ்ரீமான் T. S. வெங்கட்ரமணய்யரைத் துணையாகக் கொண்டு அவர்களுடைய உதவியால் மீட்டிங் கூட்டி பிரசங்கித்து மகஸரில் கைஜயழுத்துகள் செய்து என்னிடமேகொடுக்கச்செய்தேன் அச்சமயம் நான் மகஸர் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளவன்போலும் பிறகு நான் மஹஸர்களை கவர்னருக்கும், வைசிராய் அவர்களுக்கும் ரிஜிஸ்டர் செய்தனுப்பினேன். அங்கிருந்து புறப்பட்டு சங்கிரிதுர்க்கத்தில் ரயில் ஏறி $5\frac{1}{2}$-மணிக்கு ஈரோட்டில் இறங்கி வக்கீல் கணபதி அய்யர் முதலான நகரிலுள்ள எல்லோருக்கும், மாயவரம் வால்மீகி டி. எஸ் நடேசசாஸ்திரிகளால் பிரசுரிக்கபபட்ட துண்டுப்பிரசுரங்களை ஆயிரக்கணக்காய் கொடுக்கும், ஸ்ரீமடாதிபதிகளுடைய "தந்தி"ப்பிரசுரங்களையும் நகரில் பரப்பி மீட்டிங்குகூட அவகாசமின்மையினாலும் கேட்டவர்களுக்கு கூடிய சீக்கிரம் இங்கே வி. ஜகதீச்வரசாஸ்திரிகளாவது ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் "கவிரத்தனம்" ப. பஞ்சாபகேசசாஸ்திரிகளாவது வருவார்களென்று சொல்லிவிட்டு அடுத்த வண்டியிலேயே புறப்பட்டு ஊர்வந்து சேர்ந்தேன் சுபம்!

"க்ருஷ்யக்ஞ" வி. உமாமகேச்வரசாஸ்திரி
காட்டுமன்னார்கோவில்.

---

## விவாஹவயதுமசோதா கண்டனப் பிரசாரகர்கள் கூட்டம்.

மாயவரம்.

சென்ற மேமீ 30, 31-தேதிகளில் மாயவரத்தில் வள்ளலார் கோவில் தெருவில் ஓர் ஆலோசனைக்கமிட்டியின்கூட்டம்கூடிற்று கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமடம் கௌரவப் பிரசாரகர்கள் ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா, "கிருஹ்யக்ஞ" வி. உமாமகேச்வராசாஸ்திரிகள், வால்மீகி டி. எஸ். நடேசசாஸ்திரிகள், மற்றும் பலரும் கூடி ஆலோசனைசெய்து இதுவரை ஜில்லாசபை கூட்டின விடம்போக, மற்றயஜில்லாவில் பிரசாரம் செய்து ஜில்லாபிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், அந்தச்செலவுகளை ஜில்லா வாசிகளே ஏற்றுக்கொள்வது உசிதமென்றும், ஸ்ரீமடத்தில் ஸகாயம் செய்ய சித்தமாயிருப்பினும் தந்தம் பொறுப்பைக்காட்டாது போலாகுமென்றும் தீர்மானித்து வே. ஸோமதேவசர்மா வட ஆற்காட்டிற்கும், வி. உமாமகேச்வர சாஸ்திரிகள் சேலம் ஜில்லாவிற்கும் புறப்பட்டுச் சென்றனர்.

N. வெங்கட்டராமன்.

---

## விவாக வயது மசோதா கண்டனம்.

சுரோத்ரியம் குஞ்சுமேடு.

13—2—1928 மாலை 3 மணிக்கு ஷியூர் ஸ்ரீ மாத்வசபையின் விசேஷக்கூட்டம் ஷிசபா ஆபீஸில் ஷிசபா காரியதரிசி. ஸ்ரீமான். எச். குண்டோபருவ் தலைமையின் கீழ் கூடிற்று. பொது ஜனங்களும் ஏராளமாக கூடியிருந்தனர். தலைவர் விவாக வயது மசோதாவால் நேரும் தீமையை சுருக்கி யுக்தி அனுபவங்களைக் கொண்டு மிக தெளிவாக விளக்கிக் காட்டினார். ஸஹகாரியதரிசி ஸ்ரீமான். த.கி. சேஷாபாரியார் தலைவரின் வார்த்தையை ஆமோதித்து பேசியபின் கண்டன தீர்மானம் ஏகமானதாக நிறைவேறறப்பட்டு பலவகை யெழுத்துக்குள் வாசிக்கப்பட்டு வழச்கப்படி மகஜர் பிறகு அனுப்பப்பட்டது.

எச். குண்டோப ருவ்.
காரிய தரிசி.
ஸ்ரீ மாதவஸபை.
குஞ்சு மேடு.

---